# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி

## அ.வ.எண்.35/2021

இந்நீதிமன்றத்து எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2025 ஆண்டு ஏப்ரல் மாதம் 01 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : ராமமூர்த்தி நாயுடு | மதம் | : இந்து |
| த/பெ | : ராமகிருஷ்ண நாயுடு | ஜாதி | : -- |
| வயது | : 67 | கிராமம் | : நரசிம்ம நாயுடு கண்டிகை |
| தொழில் | : விவசாயம் | வட்டம் | : திருத்தணி |

**01.04.2025**

**வா.சா. 1 ன் முதல் விசாரணை**

1. நான் இவ்வழக்கில் வாதி ஆவேன். வாதி தரப்பு 1ம் சாட்சியாக சாட்சியம் அளிக்கிறேன். என் தரப்பில் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். எனது பிரமாண வாக்குமூலத்தை நான் சொல்லித்தான் என்னுடைய வழக்கறிஞர் தயார் செய்தார். அதில் உள்ள விவரங்கள் எனக்கு நன்கு தெரியும். பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். 09.12.2019ம் தேதியிட்ட வீட்டு வரி ரசீது தாக்கல் செய்கிறேன். **(வீட்டு வரி ரசீது வா.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** 02.03.2021ம் தேதியிட்ட வீட்டு வரி ரசீது தாக்கல் செய்கிறேன். **(வீட்டு வரி ரசீது வா.சா.ஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

(20.07.2015ம் தேதியிட்ட கிரைய ஆவணம் பதிவு செய்யவில்லை என்பதால் குறியீடு செய்ய இயலாது என பிரதிவாதி தரப்பில் ஆட்சேபணை செய்ததால் முதல் விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது)